**ஜூன் – 28**

# TNPSC துளிகள்

- சர்வதேச அணுசக்தி முகமையானது (IAEA), இதுவரையில் நடைபெறாத மிகப்பெரிய அளவிலான சர்வதேச அணுசக்தி சார்ந்த அவசர நிலைக்கான ConvEx-3 பயிற்சியினை ருமேனியாவில் நடத்தி வருகிறது.
- மத்திய அரசானது, உத்தரப் பிரதேச மாநிலத்தின் பஹ்ரைச் என்னுமிடத்தில் உள்ள கட்டார்னியாகாட் வனவிலங்கு சரணாலயத்தில் கங்கை நீர் முதலை இனங்கள் வளங் காப்புத் திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- ஆந்திரப் பிரதேச மாநில அரசானது, அரசுப் பள்ளிகளில் கல்வி ரீதியாக பின் தங்கி உள்ள மாணவர்கள் கணிதம், அறிவியல் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களில் திறம் பெற்று முன்னேற உதவும் தொழில்நுட்ப அடிப்படையிலான 'வித்யா சக்தி' எனும் ஒரு திட்டத்தினைத் தொடங்கியுள்ளது.
- இரத யாத்திரை யாத்ரீகர்களுக்கு நிகழ்நேர மற்றும் எளிதில் அணுகக் கூடிய இரயில் சேவைகளை வழங்குவதற்காக கிழக்குக் கடற்கரை இரயில்வே நிர்வாகமானது, 'ECoR யாத்ரா' செயலியை அறிமுகப்படுத்தியுள்ளது.
- 1967 ஜூன் 24 அன்று கடவுச்சீட்டு (பாஸ்போர்ட்) சட்டம் இயற்றப்பட்டதைக் குறிக்கும் வகையில், வெளியுறவுத் துறை அமைச்சகமானது பாஸ்போர்ட் சேவை தினத்தை ஜூன் 24, 2025 அன்று கொண்டாடியது.
- உலகளவில் மில்லியன் கணக்கான கைம்பெண்கள் எதிர்கொள்ளும் சவால்களை முன்னிலைப்படுத்துவதற்காக ஆண்டுதோறும் ஜூன் 23 ஆம் தேதி அன்று சர்வதேச கைம்பெண்கள் தினம் அனுசரிக்கப்படுகிறது.
  - 2025 ஆம் ஆண்டிற்கான கருத்துரு ‘Invisible Women, Invisible Problems’ என்பதாகும்.
- இந்தியாவில் அவசரநிலை அமல்படுத்தப்பட்ட 50வது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில், ஜூன் 25 அன்று ‘சம்விதான் ஹத்யா திவாஸ்’ அனுசரிக்கப்பட்டது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## பதவி உயர்வில் 4 சதவிகித இடஒதுக்கீடு

- தமிழ்நாடு மாநில அரசானது, அதன் ஊழியர்களின் பதவி உயர்வில் 4% என்ற இட ஒதுக்கீட்டை வழங்க உள்ளது.
- ஒரு பதவியின் பணியாளர்களது எண்ணிக்கை ஐந்துக்கும் அதிகமாக இருந்தால், அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்ட அடையாளம் காணப்பட்ட பதவிகளுக்கு மட்டுமே இந்த இடஒதுக்கீடு பொருந்தும்.
- ஒவ்வோர் அரசுத் துறை நிறுவனத்திலும் 25 ஆம் நிலை வரையிலான ஊதியம் பெறும் பதவிகளுக்கு மட்டுமே இத்தகையதொரு அடையாளம் கண்டறிதல் மேற்கொள்ளப்பட வேண்டும்.
- பதவி உயர்வு மற்றும் இடமாற்றம் மூலம் பணி சேர்ப்பு செய்வதிலும் (குறைந்த ஊதிய அளவு முதல் அதிக ஊதிய அளவு வரை) இந்த இடஒதுக்கீடு பொருந்தும்.
- பார்வைத் திறன் குறைபாடு மற்றும் குறைவான பார்வைத் திறன் உள்ளவர்களுக்கு 1% இடங்கள் ஒதுக்கப்பட்டாலும், கேட்கும் திறனற்றவர் மற்றும் கேட்கும் திறனில் சிரமம் உள்ளவர்களுக்கு 1% இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது.
- பெருமூளை வாதம், தொழுநோய் குணப்படுத்தப்பட்டவர்கள், குள்ளத்தன்மை, அமிலத்

தாக்குதலுக்கு ஆளானவர்கள் மற்றும் தசைநார் சிதைவு உள்ளிட்ட சில உடலியக்கக் குறைபாடுகளுக்கு 1% இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது.

- ஒரு விதியானது, 2016 ஆம் ஆண்டு மாற்றுத் திறனாளிகள் உரிமைகள் சட்டத்தின் 34வது பிரிவின் விதிகளிலிருந்து அரசாங்கம் தனது எந்தவொரு நிறுவனத்திற்கும் விலக்கு அளிக்க அனுமதிக்கிறது.




# தேசியச் செய்திகள்

## விரிவான குடும்ப வருமான கணக்கெடுப்பு




- இந்தியா 2026 ஆம் ஆண்டில் அதன் முதல் விரிவான குடும்ப வருமானங்கள் மீதான கணக்கெடுப்பை நடத்த உள்ளது.
- புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் ஆனது இந்த முன்னெடுப்பு குறித்து அறிவித்துள்ளது.
- இந்தக் கணக்கெடுப்பு ஆனது, அதிகாரப்பூர்வ புள்ளிவிவரங்களில் உள்ள பல்வேறு இடைவெளிகளை நிவர்த்தி செய்து, இந்தியக் குடும்பங்களில் உள்ள வருமானப் பரவல் குறித்த மிகவும் நம்பகமான மற்றும் விரிவான கண்ணோட்டத்தினை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தியாவின் விரைவான எண்ணிம நுட்பம் சார்ந்த மாற்றத்தின் மத்தியில் தொழில்


நுட்பத்தை ஏற்பது ஊதிய நிலைகளை எவ்வாறு பாதிக்கிறது என்பது குறித்தும் இந்தக் கணக்கெடுப்பு மதிப்பிடும்.

## இந்தியாவின் எண்ணெய் இறக்குமதி - ஜூன் 2025

- ஜூன் மாதத்தில் இந்தியா ரஷ்ய எண்ணெய் கொள்முதலை அதிகரித்துள்ளது.
- சவுதி அரேபியா மற்றும் ஈராக் போன்ற மத்திய கிழக்கு நாடுகளிடமிருந்து பெறும் ஒட்டு மொத்த அளவை விட அதிகமாக இந்தியாவானது இறக்குமதி செய்கிறது.
- ஜூன் மாதத்தில் இந்தியச் சுத்திகரிப்பு நிறுவனங்கள் ஒரு நாளைக்கு 2-2.2 மில்லியன் பீப்பாய்கள் ரஷ்ய கச்சா எண்ணெயை இறக்குமதி செய்ய வாய்ப்புள்ளது.
- இது கடந்த இரண்டு ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு அதிகமாகவும், ஈராக், சவுதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் குவைத் ஆகிய நாடுகளிலிருந்து வாங்கிய மொத்த எண்ணெய் அளவை விட அதிகமாகவும் உள்ளது.
- ரஷ்யாவிலிருந்து மேற்கொள்ளப்பட்ட இந்தியாவின் எண்ணெய் இறக்குமதி 2025 மே மாதத்தில் ஒரு நாளைக்கு 1.96 மில்லியன் பீப்பாய்கள் (bpd) ஆக இருந்தது.
- ஜூன் மாதத்தில் அமெரிக்காவிலிருந்து மேற்கொள்ளப்பட்ட இறக்குமதியும் 439,000 bpd ஆக உயர்ந்துள்ளது என்பதோடு இது முந்தைய மாதத்தில் வாங்கிய 280,000 bpd என்ற அளவிலிருந்து ஒரு மிகப்பெரிய அதிகரிப்பு ஆகும்.
- ஜீன் மாதம் முழுவதும் மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படவுள்ள அளவின் கணிப்புகள் சுமார் 2 மில்லியன் பீப்பாய்களாக உள்ளன என்ற ஒரு நிலையில், இது முந்தைய மாத கொள்முதலை விடக் குறைவு ஆகும்.
- உலகின் மூன்றாவது பெரிய எண்ணெய் இறக்குமதி மற்றும் நுகர்வு நாடாக இந்தியா உள்ளது.
- இது வெளிநாட்டிலிருந்து சுமார் 5.1 மில்லியன் பீப்பாய்கள் கச்சா எண்ணெயை வாங்கி உள்ளது.
- இந்தியா நீண்ட காலமாக மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து எண்ணெயை இறக்குமதி செய்து வருகிறது.
- 2022 பிப்ரவரி மாதத்தில் உக்ரைன் படையெடுப்பிற்குப் பிறகு ரஷ்யாவிலிருந்து அதிக அளவு எண்ணெயை இந்தியா இறக்குமதி செய்யத் தொடங்கியது.
- ரஷ்ய எண்ணெயானது (யூரல்ஸ், ESPO, சோகோல்) ஹார்மஸ் நீர்ச்சந்திப் பகுதியில் இருந்து தளவாட ரீதியாகப் பிரிக்கப்பட்டு, சூயஸ் கால்வாய், நன்னம்பிக்கை முனை அல்லது பசிபிக் பெருங்கடல் வழியாக பயணிக்கிறது.
- மேற்கத்திய நாடுகளின் பொருளாதாரத் தடைகள் மற்றும் சில ஐரோப்பிய நாடுகள் கொள்முதலைத் தவிர்ப்பதன் காரணமாக, ரஷ்ய எண்ணெய் இதர மற்ற சர்வதேச விலையை விட குறிப்பிடத்தக்க அளவில் தள்ளுபடியில் கிடைப்பதே இதற்கு முக்கியக் காரணம் ஆகும்.
- இதன் விளைவாக, மொத்த கச்சா எண்ணெய் இறக்குமதியில் சுமார் 1 சதவீதத்திற்கும் குறைவாக இருந்த இந்தியாவின் ரஷ்ய எண்ணெய் இறக்குமதியானது குறுகிய காலத்தில் 40-44 சதவீதமாக மிகப்பெரிய அளவில் உயர்ந்து உள்ளது.
- ஹார்மஸ் நீர்ச்சந்தியானது வடக்கே ஈரானுக்கும் தெற்கே ஓமன் மற்றும் ஐக்கிய அரபு அமீரகத்திற்கும் இடையில் அமைந்துள்ளது.
- இது சவுதி அரேபியா, ஈரான், ஈராக், குவைத் மற்றும் ஐக்கிய அரபு அமீரகத்தில் இருந்து செய்யப்படும் எண்ணெய் ஏற்றுமதிக்கு முக்கியப் பாதையாகச் செயல்படுகிறது.
- குறிப்பாக கத்தார் உள்ளிட்ட பல நாட்டுப் பகுதிகளில் இருந்து வரும் திரவமாக்கப்பட்ட

இயற்கை எரிவாயு (LNG) ஏற்றுமதிகளும் இந்த நீர்ச்சந்தி வழியாகவே செல்கின்றன.

- உலகின் கச்சா எண்ணெய் ஐந்தில் ஒரு பங்கு மற்றும் ஒரு பெரிய LNG ஏற்றுமதிப் போக்குவரத்தில் ஹார்மஸ் நீர்ச்சந்தி வழியாகும்.
- ஹார்மஸ் நீர்ச்சந்தியானது உலகின் ஐந்தில் ஒரு பங்கு கச்சா எண்ணெயையும், முக்கிய LNG ஏற்றுமதி போக்குவரத்திற்குப் பாதையாகவும் உள்ளது.
- இந்தியாவும் தனது மொத்த கச்சா எண்ணெயில் சுமார் 40% மற்றும் எரிவாயுவில் ஒரு பாதியை இந்த நீர்ச்சந்தி வழியாக இறக்குமதி செய்கிறது.
- மத்திய கிழக்கு வளைகுடாவிலிருந்து அதன் கடல்வழி கச்சா எண்ணெயில் சுமார் 47 சதவீதத்தை இறக்குமதி செய்யும் ஈரானின் மிகப்பெரிய எண்ணெய் வாடிக்கையாளர் ஆன சீனாவானது ஹார்மஸ் முற்றுகையால் நேரடியாக பாதிக்கப்படும்.
- மேலும், ஏற்றுமதியில் சுமார் 96 சதவீதத்தைக் கையாளும் கார்க் தீவு வழியான இந்த ஹார்மஸை எண்ணெய் ஏற்றுமதிக்கு நம்பியிருப்பது ஈரானின் சுய-தடையை எதிர் விளைவானதாக ஆக்குகிறது.
- சவூதி அரேபியா மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய இரு நாடுகளும் ஏற்றுமதிக்காக இந்த நீர்ச்சந்தியை பெரிதும் நம்பியுள்ளன.
- இந்த முற்றுகையின் விளைவாக இறுதியில், இந்தியாவானது அமெரிக்கா, நைஜீரியா, அங்கோலா மற்றும் பிரேசில் ஆகிய சில நாடுகளை நோக்கிச் செல்லக் கூடும், ஆனால் இதனால் அதிக சரக்குக் கட்டணங்கள் செலுத்த வேண்டியிருக்கும்.





# பொருளாதாரச் செய்திகள்

## GDP மற்றும் CPI கணக்கீடுகளுக்கு வெவ்வேறு அடிப்படைக் கணக்கீட்டு ஆண்டு

- மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) மற்றும் சில்லறைப் பணவீக்கத்தினை (நுகர்வோர் விலைக் குறியீடு அல்லது CPI மூலம் அளவிடப்படுகிறது) கணக்கிடுவதற்கு அரசாங்கம் வெவ்வேறு அடிப்படை ஆண்டுகளை ஏற்க உள்ளது.
- மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான முன்மொழியப்பட்ட அடிப்படை ஆண்டு 2022–23

ஆகும், அதே நேரத்தில் நுகர்வோர் விலைக் குறியீட்டிற்கான அடிப்படை ஆண்டு 2023–24 ஆகும்.

- தற்போது, GDP மற்றும் CPI ஆகிய இரண்டும் 2011–12 ஆம் ஆண்டினை அதன் அடிப்படை ஆண்டாகப் பயன்படுத்திக் கணக்கிடப்படுகின்றன.
- மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு 2022–23 ஆம் ஆண்டினை ஒரு அடிப்படை ஆண்டாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு, தொழில்துறைகளின் வருடாந்திரக் கணக்கெடுப்பு (ASI), இணைக்கப்படாத துறை நிறுவனங்களின் வருடாந்திரக் கணக்கெடுப்பு (ASUSE) மற்றும் அந்த ஆண்டில் நடத்தப்படும் வீட்டு நுகர்வு கணக்கெடுப்பு போன்ற முக்கியத் தரவு ஆதாரங்கள் காரணமாகும்.
- விலை சார் தகவல் சேகரிப்புக் கணக்கெடுப்பு ஆனது 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் தொடங்கியதால், CPI கணக்கெடுப்பிற்கு 2023–24 ஆம் ஆண்டினை அடிப்படை ஆண்டாகப் பயன்படுத்தப்பட உள்ளது.
- GDP மற்றும் CPI கணக்கீடுகளுக்கான புதிய அடிப்படை ஆண்டுகள் 2026–27 ஆம் நிதி ஆண்டில் இருந்து செயல்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப் படுகின்றன.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## ஆக்ஸியம்-4 விண்வெளிப் பயணம்


- குழுத் தலைவர் சுபான்ஷு சுக்லா விண்வெளிக்குச் சென்ற இரண்டாவது இந்தியர் என்ற பெருமையினைப் பெற்றார்.
- 1984 ஆம் ஆண்டில் சோவியத் ஒன்றியத்தின் சோயுஸ் விண்கலத்தில் விண்வெளிக்குப் பயணித்து, விண்வெளிக்குச் சென்ற முதல் இந்தியர் என்ற பெரும் பெருமையினைப் பெற்றவர் ராகேஷ் சர்மா ஆவார்.
- சுக்லா சர்வதேச விண்வெளி நிலையத்திற்கான (ISS) ஆக்சியம் 4 விண்வெளிப் பயணத்தின் (ஆக்ஸ்-4) ஒரு பகுதியாக பங்கேற்றுள்ளார்.
- இது புளோரிடாவில் உள்ள நாசாவின் கென்னடி விண்வெளி மையத்திலிருந்து பால்கன் 9 ஏவுகலம் மூலம் விண்ணில் ஏவப்பட்டது.
- ஆக்சியம் 4 விண்வெளிப் பயணத்தில் ஆக்சியம் ஸ்பேஸ், நாசா மற்றும் ஸ்பேஸ்எக்ஸ் ஆகியவை ஈடுபட்டுள்ளன.
- இந்தியா, போலந்து மற்றும் ஹங்கேரி ஆகிய நாடுகள் ஒவ்வொன்றும் தலா ஒரு விண்வெளி வீரரை விண்வெளிக்கு அனுப்பியுள்ளன.

- இக்குழுவினர் விண்வெளியில் 14 நாட்கள் வரை தங்கி, அறிவியல் ஆராய்ச்சி மற்றும் செயல்பாடுகளை மேற்கொள்வார்கள்.
- ஆக்சியம் 4 விண்வெளிப் பயணம் என்பது தனியார் விண்வெளி வீரர்களின் சர்வதேச விண்வெளி நிலையத்திற்கான நான்காவது பயணமாகும்.




## சுற்றுச்சூழல் செய்திகள்

### Thirstwave – புதிய சொல்




- மீட்பால் குகல் மற்றும் மைக் ஹாபின்ஸ் மற்றும் அமெரிக்க தேசியப் பெருங்கடல் மற்றும் வளிமண்டல நிர்வாகம் ஆனது "Thirstwave" என்ற ஒரு சொல்லினை உருவாக்கி உயுள்ளனர்.
- இந்தச் சொல் மூன்று அல்லது அதற்கு மேற்பட்டத் தொடர்ச்சியான நாட்கள் தீவிர ஆவியாதல் தேவையைக் குறிக்கிறது.
- தினசரி ஆவியாதல் தேவையானது, குறைந்தது மூன்று நாட்களுக்கு மேல் இதுவரை பதிவான 90வது சதவீதத்திற்கு மேல் இருக்கும் போது Thirstwave ஏற்படுகிறது.
- ஆவியாதல் தேவை என்பது வளிமண்டலம் எவ்வளவு நீரை ஆவியாக்குகிறது அல்லது


நிலம் அல்லது தாவரங்களிலிருந்து எவ்வளவு தண்ணீரை உறிஞ்ச இயலும் என்பதைக் குறிக்கிறது.

- இது வெப்பநிலை, காற்றின் வேகம், ஈரப்பதம் மற்றும் சூரிய ஒளியினால் தாக்கத்திற்கு உள்ளாகிறது.

## குளிரூட்டல் குறித்த NDC வழிகாட்டுதல்கள்

- உலகளாவியப் பருவநிலை மற்றும் எரிசக்தி அமைப்புகளின் ஆதரவுடன் ஐக்கிய நாடுகள் சபையின் சுற்றுச்சூழல் திட்ட அமைப்பின் (UNEP) குளிர்வித்தல் நுட்பம் சார் கூட்டணியின் NDC பணிக்குழுவால் இந்த வழிகாட்டுதல்கள் உருவாக்கப்பட்டன.
- இது உலக நாடுகளின் செயல்பாடுகள் ஆய்வறிக்கையினால் ஆதரிக்கப்படும் ஆறு-நிலையிலான படிப்படியான கட்டமைப்பை வழங்குகிறது.
- அவை உமிழ்வை மதிப்பிடுவதற்கும், துறை சார்ந்த இலக்குகளை நிர்ணயிப்பதற்கும், தேசியக் குளிரூட்டல் செயல் திட்டங்களை (NCAPs) உருவாக்குவதற்கும் கொள்கை வகுப்பாளர்களுக்கு வழி காட்டுகின்றன.
- இது ஆற்றல் திறன் தரநிலைகள் கிகாலி உடன்படிக்கைக்கு இணக்கமான குளிர் பதனப் பொருள் பயன்பாட்டுக் குறைப்பு, மிகவும் அதிகத் தாக்கமற்ற குளிர்விப்பு நடைமுறைகள் மற்றும் பருவநிலைக்கு ஏற்ற நகர்ப்புறத் திட்டமிடல் ஆகியவற்றினை வலியுறுத்துகிறது.
- இக்குளிரூட்டல் தொழில் துறையானது, தற்போது உலகளாவியப் பசுமை இல்ல வாயு உமிழ்வில் 7% பங்களிக்கிறது என்பதோடு மேலும் அது 2050 ஆம் ஆண்டிற்குள் அதன் பங்கை இரட்டிப்பாக்கக் கூடும்.
- இந்த நடவடிக்கைகள் பருவநிலைக்கு ஏற்ற நுட்ப ஏற்பு மற்றும் தணிப்பு இலக்குகள் ஆகிய இரண்டையும் ஆதரிக்கின்றன.

Figure 3: A holistic methodology for NCAP development




# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## உலகளாவிய அமைதிக் குறியீடு 2025

- பொருளாதாரம் மற்றும் அமைதி நிறுவனம் (IEP) ஆனது 2025 ஆம் ஆண்டு உலகளாவிய அமைதிக் குறியீட்டினை (GPI) உருவாக்கியுள்ளது.
- உலக மக்கள்தொகையில் 99.7 சதவீதத்தினை உள்ளடக்கிய GPI ஆனது, நம்பகமான ஆதாரங்களில் இருந்து சுமார் 23 தரமான மற்றும் அளவு சார் குறிகாட்டிகளைப்

பயன்படுத்துகிறது.

- இது சமூகப் பாதுகாப்பு மற்றும் காவல், நடைபெற்று வரும் உள்நாட்டு மற்றும் சர்வதேச மோதல்கள் மற்றும் இராணுவமயமாக்கல் என மூன்று களங்களில் அமைதி நிலையை மதிப்பிடுகிறது.
- 2025 ஆம் ஆண்டில் உலகளாவிய அமைதியின் சராசரி நிலை 0.36% என்ற அளவிற்கு குறைந்து, தொடர்ந்து ஆறாவது ஆண்டாக மோசமடைவதைக் குறிக்கிறது.
- 2.229 என்ற GPI மதிப்புடன் 163 நாடுகளில் இந்தியா 115 வது இடத்தில் உள்ளது.
- இது 2024 ஆம் ஆண்டில் இருந்ததை விட 0.58% முன்னேற்றத்தைக் காட்டுகிறது (116வது இடம்).
- உலகளவில் பாதுகாப்பான நாடான ஐஸ்லாந்து, அனைத்து களங்களிலும் மிக உயர்ந்த இடத்தில் உள்ளது.
- உலகின் மிகக் குறைந்த அளவு அமைதியான நாடு ரஷ்யா ஆகும்.
- இந்தக் குறியீட்டில் வங்க தேசம் 123வது இடத்திலும், பாகிஸ்தான் 144வது இடத்திலும், ஆப்கானிஸ்தான் 158வது இடத்திலும் உள்ளன.

| RANK | COUNTRY | SCORE | CHANGE |
|---|---|---|---|
| 84 | Panama | 2.006 | ↑ 4 |
| 85 | Morocco | 2.012 | ↓ 3 |
| 86 | Thailand | 2.017 | ↓ 5 |
| =87 | Cambodia | 2.019 | ↓ 12 |
| =87 | Turkmenistan | 2.019 | ↑ 7 |
| 89 | Trinidad and Tobago | 2.020 | ↓ 17 |
| 90 | Saudi Arabia | 2.035 | ↑ 14 |
| 91 | Rwanda | 2.036 | ↑ 12 |
| 92 | Algeria | 2.042 | ↓ 1 |
| 93 | Jamaica | 2.047 | ↓ 13 |
| 94 | Côte d'Ivoire | 2.066 | ↓ 2 |
| 95 | Azerbaijan | 2.067 | ↑ 17 |
| 96 | Peru | 2.073 | ↑ 14 |
| 97 | Sri Lanka | 2.075 | ↑ 2 |
| 98 | China | 2.093 | ↓ 11 |
| 99 | Eswatini | 2.094 | ↓ 5 |
| 100 | Bahrain | 2.099 | ↓ 7 |
| 101 | Guinea-Bissau | 2.112 | ↓ 5 |
| 102 | Cuba | 2.123 | ↓ 2 |
| 103 | Republic of the Congo | 2.132 | ↓ 5 |
| 104 | El Salvador | 2.136 | ↑ 1 |
| 105 | Philippines | 2.148 | ↑ 6 |
| 106 | Guyana | 2.149 | ↔ |
| 107 | Egypt | 2.157 | ↑ 2 |
| 108 | Guatemala | 2.174 | ↔ |
| 109 | Georgia | 2.185 | ↓ 8 |
| 110 | Mauritania | 2.204 | ↓ 8 |


| RANK | COUNTRY | SCORE | CHANGE |
|---|---|---|---|
| 111 | Nicaragua | 2.207 | ↑ 2 |
| 112 | Benin | 2.211 | ↑ 5 |
| 113 | Uganda | 2.217 | ↑ 12 |
| 114 | Zimbabwe | 2.223 | ↑ 8 |
| 115 | India | 2.229 | ↔ |
| 116 | Papua New Guinea | 2.230 | ↓ 9 |
| 117 | Gabon | 2.238 | ↓ 1 |
| 118 | Guinea | 2.253 | ↑ 6 |
| =119 | Lesotho | 2.267 | ↑ 4 |
| =119 | Belarus | 2.267 | ↓ 2 |
| 121 | Mozambique | 2.273 | ↓ 7 |
| 122 | Djibouti | 2.276 | ↓ 2 |
| 123 | Bangladesh | 2.318 | ↓ 33 |
| =124 | South Africa | 2.347 | ↑ 3 |
| =124 | Honduras | 2.347 | ↓ 4 |
| 126 | Togo | 2.381 | ↓ 7 |
| 127 | Kenya | 2.392 | ↓ 1 |
| 128 | United States of America | 2.443 | ↔ |
| 129 | Ecuador | 2.459 | ↔ |
| 130 | Brazil | 2.472 | ↑ 1 |
| 131 | Libya | 2.478 | ↑ 1 |
| 132 | Eritrea | 2.542 | ↑ 1 |
| 133 | Burundi | 2.574 | ↓ 3 |
| 134 | Chad | 2.593 | ↔ |
| 135 | Mexico | 2.636 | ↑ 2 |
| 136 | Lebanon | 2.674 | ↓ 1 |
| 137 | Cameroon | 2.683 | ↑ 5 |

| RANK | COUNTRY | SCORE | CHANGE |
|---|---|---|---|
| 138 | Ethiopia | 2.688 | ↑ 5 |
| 139 | Venezuela | 2.692 | ↓ 3 |
| 140 | Colombia | 2.695 | ↑ 1 |
| 141 | Haiti | 2.731 | ↑ 3 |
| 142 | Iran | 2.750 | ↓ 4 |
| 143 | Niger | 2.759 | ↓ 4 |
| 144 | Pakistan | 2.797 | ↓ 4 |
| 145 | Palestine | 2.811 | ↑ 1 |
| 146 | Turkiye | 2.852 | ↑ 1 |
| 147 | Iraq | 2.862 | ↑ 3 |
| 148 | Nigeria | 2.869 | ↓ 3 |
| 149 | North Korea | 2.911 | ↔ |
| 150 | Central African Republic | 2.912 | ↓ 2 |
| 151 | Somalia | 2.983 | ↑ 3 |
| 152 | Burkina Faso | 3.016 | ↔ |
| 153 | Myanmar | 3.045 | ↓ 2 |
| 154 | Mali | 3.061 | ↓1 |
| 155 | Israel | 3.108 | ↔ |
| 156 | South Sudan | 3.117 | ↑ 2 |
| 157 | Syria | 3.184 | ↓ 1 |
| 158 | Afghanistan | 3.229 | ↑ 2 |
| 159 | Yemen | 3.262 | ↑ 3 |
| 160 | Democratic Republic of the Congo | 3.292 | ↓ 3 |
| 161 | Sudan | 3.323 | ↑ 2 |
| 162 | Ukraine | 3.434 | ↓ 3 |
| 163 | Russia | 3.441 | ↓ 2 |

## SDG குறியீட்டில் முதல் 100 இடங்களுக்குள் இந்தியா

- சமீபத்திய நிலையான மேம்பாட்டு அறிக்கை (SDR) ஆனது ஐக்கிய நாடுகள் சபையின் நிலையான மேம்பாட்டுத் தீர்வுகள் வலையமைப்பினால் வெளியிடப்பட்டது.
- 2025 ஆம் ஆண்டு SDG குறியீட்டில் இடம் பெற்ற 167 நாடுகளுள், 2024 ஆம் ஆண்டில் 109வது இடத்தில் இருந்த இந்தியா 67 மதிப்பெண்களுடன் 99வது இடத்தில் உள்ளது.
- இப்பட்டியலில் உள்ள முதல் 100 நாடுகளுள் ஒன்றாக இந்தியா இடம் பிடித்தது இதுவே முதல் முறையாகும்.
- சீனா 74.4 மதிப்பெண்களுடன் 49வது இடத்தில் உள்ளது, அதே நேரத்தில் அமெரிக்கா 75.2 புள்ளிகளுடன் 44வது இடத்தில் உள்ளது.
- இந்தியாவின் அண்டை நாடுகளில், பூடான் 70.5 புள்ளிகளுடன் 74வது இடத்திலும், நேபாளம் 68.6 புள்ளிகளுடன் 85வது இடத்திலும், வங்காளதேசம் 63.9 புள்ளிகளுடன் 114வது இடத்திலும், பாகிஸ்தான் 57 புள்ளிகளுடன் 140வது இடத்திலும் உள்ளன.
- இந்தியாவின் கடல்சார் அண்டை நாடுகளான மாலத்தீவு மற்றும் இலங்கை ஆகியவை முறையே 53வது மற்றும் 93வது இடத்திலும் உள்ளன.

- 2030 ஆம் ஆண்டிற்குள் உலகளாவிய வளர்ச்சியில் எந்த ஒரு நாடும் பின்தங்கியிருக்கக் கூடாது என்பதை உறுதி செய்வதற்காக 2015 ஆம் ஆண்டில் SDG இலக்குகள் ஏற்றுக் கொள்ளப் பட்டன.
- உலக நாடுகள் 0 முதல் 100 வரையிலான மதிப்பில் மதிப்பிடப்படுகின்றன, இதில் 100 என்பது 17 இலக்குகளும் முழுமையாக அடையப்பட்டுள்ளன என்பதைக் குறிக்கிறது.




## நிதி மற்றும் ஏய்ப்பு குறித்த FATF அறிக்கை




- நிதியியல் நடவடிக்கைப் பணிக்குழு (FATF) ஆனது, ஆயுதப் பரவல் நிதி (PF) மற்றும் தடைகள் ஏய்ப்பு குறித்த அறிக்கையை வெளியிட்டது.
- இதில் PF என்பது உலகளாவியப் பாதுகாப்பை அச்சுறுத்தும் பேரழிவினை ஏற்படுத்தும் ஆயுதங்களை (WMD) ஆதரிப்பதற்காக நிதி திரட்டுதல் என்பதாகும்.
- வட கொரியா, ஈரான், ரஷ்யா போன்ற சில நாடுகளிலிருந்தும், அரசு சாரா தீவிரவாதம் மற்றும் குற்றவியல் குழுக்களிடமிருந்தும் முக்கிய அச்சுறுத்தல்கள் வருகின்றன.
- கட்டமைப்பு மற்றும் குறிப்பிட்ட துறைகள் ரீதியாக தேசிய அமைப்புகளில் உள்ள பல பலவீனங்களை இந்த அறிக்கை எடுத்துக்காட்டுகிறது.
- இது 19 நாடுகளைச் சேர்ந்த 38 வழக்குகளைப் பகுப்பாய்வு செய்து, 4 பொதுவான PF

மற்றும் தடைகள் ஏய்ப்பு முறைகளை அடையாளம் கண்டுள்ளது.

❖ FATF ஆனது, உலக நாடுகள் தங்கள் முயற்சிகளை மேம்படுத்துவதற்காக 4 முக்கியப் பரிந்துரைகளை வழங்குகிறது.

❖ WMD ஆயுதப் பரவலை நிறுத்துவதை நோக்கமாகக் கொண்ட UN தடைகளை சுமார் 16% நாடுகள் மட்டுமே முழுமையாக செயல்படுத்துகின்றன.

### உலகப் புகையிலைப்பயன்பாட்டுப் பரவல் அறிக்கை 2025

❖ இந்த அறிக்கையானது அயர்லாந்து நாட்டின் டப்ளினில் நடைபெற்ற புகையிலைக் கட்டுப்பாடு குறித்த உலக மாநாட்டில் உலக சுகாதார அமைப்பினால் (WHO) வெளியிடப் பட்டது.

❖ புகையிலைப் பயன்பாட்டைக் குறைப்பதற்கான ஆறு நிரூபிக்கப்பட்ட WHO MPOWER நடவடிக்கைகளில் இந்த அறிக்கை கவனம் செலுத்துகிறது.

❖ புகையிலை ஆனது ஆண்டுதோறும் 7 மில்லியனுக்கும் அதிகமான உயிரிழப்புகளை ஏற்படுத்துகிறது.

❖ WHO ஆனது 2008 ஆம் ஆண்டில் MPOWER உத்தியைத் தொடங்கியது.

❖ 2007 ஆம் ஆண்டு முதல், 155 நாடுகள் சிறந்த நடைமுறை நிலையில் குறைந்தது ஒரு MPOWER நடவடிக்கையை ஏற்று மேற்கொண்டன.

❖ இந்தியா புகையிலை புகைப்பதை நிறுத்துவதற்கு உதவி வழங்குதல் மற்றும் புகையிலை ஆபத்துகள் குறித்து எச்சரிக்கை செய்தல் போன்ற இரண்டு முக்கிய நடவடிக்கைகளை முழுமையாக செயல்படுத்தியுள்ளது.

❖ மற்ற நான்கு MPOWER உத்திகளில் இந்தியா ஒரு மிதமான முன்னேற்றத்தையே பதிவு செய்துள்ளது.




## பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

### நாசாவின் விண்வெளித் திட்டத்தினை நிறைவு செய்த முதல் இந்தியர்

❖ ஆந்திரப் பிரதேச மாநிலத்தைச் சேர்ந்த ஜஹ்னவி டாங்கெட்டி, நாசாவின் சர்வதேச வான்வெளி மற்றும் விண்வெளித் திட்டத்தை நிறைவு செய்த முதல் இந்தியர் ஆவார்.

- 2029 ஆம் ஆண்டில் டைட்டன்ஸ் விண்வெளிப் பயணத்தில் பயணிக்க உள்ள முதல் இந்திய விண்வெளி வீரர் என்ற பெருமையினை அவர் பெற உள்ளார்.
- நாசாவின் Space Apps Challenge என்ற போட்டியில் பீப்பிள்ஸ் சாய்ஸ் விருது மற்றும் இஸ்ரோ உலக விண்வெளி வார இளம் சாதனையாளர் விருது வழங்கி ஜஹ்னவி கௌரவிக்கப் பட்டுள்ளார்.




# முக்கிய தினங்கள்

## ஐக்கிய நாடுகளின் பொதுச் சேவை தினம் 2025 - ஜூன் 23




- டிசம்பர் 20, 2002 அன்று ஐநா பொதுச் சபை இந்த நாளை அறிவித்தது.
- ஐக்கிய நாடுகள் சபையானது 2003 ஆம் ஆண்டு ஐ.நா பொதுச் சேவை விருதுகள் (UNPSA) திட்டத்தையும் நிறுவியது.
- உலகெங்கிலும் உள்ள குடிமக்களின் வளர்ச்சியை முன்னெடுப்பதிலும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதிலும் பொது/அரசு ஊழியர்கள் மற்றும் பொதுத்துறையின் முக்கியப் பங்களிப்புகளை இது கௌரவிக்கிறது.
- 2025 ஆம் ஆண்டுக்கான ஐக்கிய நாடுகளின் பொதுச் சேவை மன்றம்

உஸ்பெகிஸ்தானின் சமர்கண்டில் நடைபெற்றது.

- இந்த நிகழ்வின் கருத்துரு "Five Years to 2030: Accelerating Public Service Delivery for a Sustainable Future" என்பதாகும்.

## சர்வதேச தூதுறவுப் பெண்கள் தினம் 2025 - ஜூன் 24

- தூதுறவுத் துறையில் பெண்கள் வகிக்கும் முக்கியப் பங்கை மதித்து அங்கீகரிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது
- ஜனவரி 2025 நிலவரப்படி 25 நாடுகளில் மட்டுமே பெண் அரசுத் தலைவர் அல்லது பெண் தலைமையிலான அரசாங்கம் உள்ளது.
- கொலம்பியா உலகின் எட்டாவது பெண்ணிய வெளியுறவுக் கொள்கை கொண்ட நாடாக மாறியுள்ளது.
- உலகில் முதன்முதலில் பெண்ணிய வெளியுறவுக் கொள்கையை ஏற்றுக்கொண்ட நாடு (2014) ஸ்வீடன் ஆகும்.
- 2025 ஆம் ஆண்டிற்கான கருத்துரு 'Eliminating structural barriers to women's leadership in diplomacy' என்பதாகும்.




## உலக தோல் நிறமி இழப்பு நோய் தினம் 2025 – ஜூன் 25




- இந்த நாள், இந்நோயால் பாதிக்கப்பட்டவர்கள் எதிர்கொள்ளும் சமூக களங்கம் மற்றும் மனச் சவால்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- தோல் நிறமி இழப்பு நோய் என்பது மெலனின் உற்பத்தி செய்யும் மெலனோ

சைட்டுகள் உடலின் நோயெதிர்ப்பு மண்டலத்தால் அழிக்கப்படுகின்ற நிலையாகும்.

- இது தோல் அதன் நிறத்தை இழக்க வழி வகுத்து தோலில் வெண்மையான மற்றும் மென்மையான திட்டுகளை ஏற்படுத்துகிறது.
- இந்த ஆண்டிற்கான கருத்துரு "Innovation for Every Skin, Powered by AI" என்பதாகும்.

## சர்வதேச கப்பல்சார் பணியாளர்கள் தினம் 2025 - ஜூன் 25

- இந்த நாளை சர்வதேச கடல்சார் அமைப்பு (IMO) 2010 இல் அறிவித்தது.
- உலகளாவிய வர்த்தகம், பொருளாதாரம் மற்றும் பொதுச் சமூகத்திற்கு கப்பல்சார் பணியாளர்களின் மிக முக்கியப் பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையில் இந்த நாள் கொண்டாடப்படுகிறது.
- இந்த ஆண்டு, IMO அமைப்பானது My Harassment-Free Ship' என்ற ஒரு பிரச்சாரத்தைத் தொடங்கியுள்ளது.
- IMO அமைப்பானது 1948ஆம் ஆண்டு மார்ச் 17 அன்று நிறுவப்பட்டது.
- இதன் தலைமையகம் ஐக்கிய பேரரசில் உள்ள லண்டனில் அமைந்துள்ளது.




## போதைப் பொருள்களின் தவறான பயன்பாடு மற்றும் சட்டவிரோத கடத்தலுக்கு எதிரான சர்வதேச தினம் 2025 - ஜூன் 26





- டிசம்பர் 7, 1987 அன்று, ஐநா பொதுச் சபை இந்த நாளை அறிவித்தது.

- உலகம் முழுவதும் சட்டவிரோத போதைப்பொருள் பயன்பாட்டை முடிவுக்கு கொண்டு வருவதற்கான முயற்சியில் நடவடிக்கை மற்றும் ஒத்துழைப்பை அதிகரிப்பதே இதன் நோக்கமாகும்.
- 2025-ஆம் ஆண்டிற்கான கருத்துரு "Break the Cycle. #StopOrganizedCrime'' என்பதாகும்.

# இதரச் செய்திகள்

## நீதிபதி M.M. இஸ்மாயில் ஆணையம்

- இந்த ஆணையமானது, 1976 ஆம் ஆண்டு பிப்ரவரி முதல் 1977 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் வரையில் சென்னை மத்தியச் சிறையில், உள்நாட்டுப் பாதுகாப்பு பேணுதல் சட்டத்தின் (MISA) கீழ் கைது செய்யப்பட்ட சில கைதிகள் துன்புறுத்தப்பட்டதாகவும், அடிக்கப்பட்டதாகவும் எழுந்த குற்றச்சாட்டுகளை விசாரித்தது.
- இந்த ஆணையமானது, இந்தக் குற்றச்சாட்டுகள் கணிசமாக மிகச் சரியானவை எனக் கண்டறிந்து, சில சிறை அதிகாரிகள் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தது.
- இந்த ஆணையம் தனது அறிக்கையை M.G. ராமச்சந்திரன் தலைமையிலான அதிமுக கட்சியின் முதல் அரசாங்கத்திடம் 1977 ஆம் ஆண்டு செப்டம்பர் 26 ஆம் தேதி அன்று சமர்ப்பித்தது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★